முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

**வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்**
**Provincial Education Department (NWP)**

**33 T I**

දෙවන වාර විභාගය 2024
இரண்டாம் தவணைப் பரீட்சை 2024
Second Term Examination 2024

ඉතිහාසය I
வரலாறு I
History I

10 වන ශ්‍රේණිය
தரம் 10
Grade 10

පැය තුනයි
1 மணித்தியாலம்
Three hours

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

## வரலாறு I

**கவனிக்க :**
1. **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
2. **இலக்கம் 01 - 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**
3. **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் சரியான விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே (X) அடையாளமிடுக.**
4. **அவ்விடைத்தாளில் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றை பின்பற்றுக.**

01. இலங்கையின் அரசியல் வரலாற்றை முதன்மையாகக் கொண்டு எழுதப்பட்ட நூல் எது?
1. ரசவாஹினி 2. ராஜாவலிய 3. தீபவம்சம் 4. நிகாய சங்கிரகய

02. நமது கலாசார வரலாற்றின் உயிரோட்டமுள்ள ஆதாரங்களை உள்ளடக்கிய விடை யாது?
1. மத நம்பிக்கைகளும் பழக்க வழக்கங்களும்.
2. சீகிரியா சித்திரம், கற்றூண்கள், மற்றும் குளங்கள்
3. பண்டைய கலை சிற்பங்கள் மற்றும் செதுக்கல்கள்
4. கல்வெட்டுக்கள் மற்றும் கட்டிடக்கலை நிர்மாணங்கள்.

03. பின்வரும் தகவல்களுள் பிற நபர்கள் கொடுத்த தகவலின் அடிப்படையில் இலங்கை பற்றிய தகவல்களை எழுதிய நபர் யார்?
1. ரொபட் நொக்ஸ் 2. ரிபைரோ
3. பர்னாவோ குவேரோஸ் 4. பிலிப்ஸ் பல்டியஸ்

04. பின்வரும் எக்காரணத்தினால் தொல்பொருட்களைப் பாதுகாக்க வேண்டும்?
1. இது சுற்றுலாவிற்கு அவசியம்
2. இலங்கையின் தனித்துவத்தை காட்டுவதற்கு
3. பண்டைய அரசர்களின் நீர்ப்பாசனத் தொழிநுட்பத்தை அறிந்து கொள்ள.
4. பண்டைய கட்டிடக் கலை தொழிநுட்பத்தை அறிந்து கொள்வதற்கு.

05. உடமல்ல, அலுமல்ல, புந்தல போன்ற வரலாற்றுக்கு முற்பட்ட கால குடியேற்றங்களுக்குரிய சுற்றாடல் வலயம் யாது?
1. தாழ்நில உலர் வலயம் 2. தாழ்நில இடை உலர் வலயம்
3. மலை நாட்டு இடை உலர் வலயம் 4. அரை வரல் வலயம்

06. * காட்டுப்பலா விதைகளை சுட்டுச் சாப்பிட்டமை.
* உணவில் உப்புப் பயன்படுத்தியமை.
மேற்கூறிய சான்றுகள் கிடைக்கப் பெற்ற வரலாற்றுக்கு முற்பட்ட கால இடம் எது?
1. பெல்லன் பெதிபெலஸ்ஸ 2. கித்துகல பெலிலேன
3. அத்தன கொட அலுலேன 4. பட்டதொம்பலேன

07. வரலாற்றுக்கு முட்பட்ட கால சமூகம் வாழ்ந்த சுற்றாடல் வலயத்தினை தெரிவு செய்யும் போது கவனம் செலுத்தப்பட்ட மிக முக்கிய காரணி யாது?
1. இயற்கை வளங்கள் அதிகமுள்ள பிரதேசம்.
2. வருடாந்த மழை வீழ்ச்சியின் அளவு
3. இயற்கை காடுகள்
4. வானிலை

08. * இரும்பு பயன்பாட்டின் ஆரம்பம்.
* வீட்டின் அத்திவாரம் உறுதியாக தயார் செய்தல்.
மேற்கூறப்பட்ட ஆதாரங்கள் கிடைக்கப் பெற்ற யுகம் யாது?
1. ஆரம்ப வரலாற்றுக் காலம்
2. வரலாற்றுக்கு முற்பட்ட காலம்
3. முன் வரலாற்றுக் காலம்
4. வரலாற்றுக் காலம்

09. அழிவு தரும் வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தவதற்கான தொழிநுட்பம் தெரியாத ஆரம்ப வரலாற்றுக்கால மக்கள் தமது குடியேற்றங்களை எவ்வாறு அமைத்துக் கொண்டனர்?
1. நதிக்கரை முடிவில்
2. நதிக்கரைக்கு மத்திய பகுதியில்
3. நதிக்கரைக்கு அண்மையில்
4. நதிக்கரைக்கு அப்பால்

10. பிராமி கல்வெட்டுக்களில் காணப்படும் ‘அவரண’ எனும் சொல் குறிப்பிடும் பொருள் யாது?
1. அணைக்கட்டு
2. நதி
3. கிராமக்குளம்
4. கால்வாய்

11. பின்வரும் நிரல் i இல் காணப்படும் தகவல்களை நிரல் ii உடன் இணைக்கும் போது பெறப்படும் மிகச் சரியான விடையை தெரிவு செய்க.

| **நிரல் 1** | **நிரல் 11** |
|---|---|
| 1. புராதன கிராமமொன்றில் வாழும் ஏழைக்குடியானவன் நெல் மூடை ஒன்றைக் கடனாகப் பெற்றுக் கொள்ளல். | A. புத் சரண |
| 2. இல்லத்தலைவர்களில் இருந்து கிராமத் தலைவர் தெரிவு செய்யப்படல். | B. தம்பியாஅட்டுவாகெடபதய |
| 3. கல்வியறிவில் சிறந்து விளங்கிய பெண்கள் பது பாச்சிகா என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டனர். | C. ஜாதக அட்டகதா |
| 4. புராதன கால சேனைப்பயிர்ச் செய்கை செஹென் எனக் குறிப்பிடப்பட்டிருத்தல். | D. சமந்த பாசதிகா |

1. ACBD
2. CDBA
3. ADBC
4. CDAB

12. அரசு பற்றிய கோட்பாடுகளில் காணப்படும் ஒவ்வொரு கொள்கையிலும் அரசனின் உயர்வைப் பற்றி கூறுவதற்கு பயன்படுத்தப்பட்டவையாகும். இதனூடாக அரசன் பற்றிய மக்களின் எதிர்பார்ப்பு யாது?
1. ஆக்கிரமிப்புக் கொள்கை
2. சுயநலவாதியாக செயற்படல்
3. கடுமையான தீர்மானம் எடுத்தல்
4. முன்மாதிரியாகவும் தார்மீக கொள்கையுமுடைய வகையில் செயற்படல்.

13. மையப்படுத்தப்பட்ட நிர்வாகத்தைக் கட்டியெழுப்ப அனைத்து வசதிகளையும் கொண்ட தலை நகரமொன்றை உருவாக்கிய ஆட்சியாளன்.
1. பண்டுகாபயன்
2. விஜயன்
3. துட்டகைமுனு
4. தேவநம்பிய திஸ்ஸன்

**பின்வரும் அட்டவணையில் A _ H வரையுள்ள தகவல்களைக் கொண்டு 14, 15 ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

| இராசதானி | தொடர்பு | தொடர்பு கொண்ட நாடு |
|---|---|---|
| A. அனுராதபுரம் | C. பத்தினி தேவாலயத்தின் திறப்பு விழாவிற்குச் செல்லுதல் | F. உரோம் |
| B. பொலன்னறுவை | D.ருவன்வெலிசாய தூபியை அலங்கரிக்க கண்ணாடி மணிகள் கொண்டு வரல் | G. சேர |
| | E. வேளைக்காரப் படையால் தளதாமாளிகைக்கு பாதுகாப்பு வழங்குதல். | H. தென்னிந்தியா |

14. பாதிகாபய மன்னனுடன் தொடர்புபட்ட தகவல்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி,
    1. ADH 2. ADF 3. BDH 4. BDF

15. முதலாம் விஜயபாகு மன்னனுடன் தொடர்புபட்ட தகவல்களை உள்ளடக்கிய விடைத் தொகுதி.
    1. AEF 2. BCG 3. BEH 4. BCH

16. இலங்கையை சிவப்புத் தீவு என அழைத்த நாட்டவர் யார்?
    1. உரோமர் 2. கிரேக்கர் 3. அரேபியர் 4. போர்த்துக்கேயர்

17. நானாதேசி எனும் வர்த்தக சங்கத்திற்குச் சொந்தமான உலோக முத்திரையொன்று கண்டெடுக்கப்பட்ட பிரதேசம் எது?
    1. போவத்தேகல 2. சிகிரியா நீர்ப்பூங்கா
    3. மகியங்கனை 4. அம்பாந்தோட்டை

18. நிரல் i னை நிரல் ii உடன் பொருத்தும் போது ஏற்படும் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.

| நிரல் i | நிரல் ii |
|---|---|
| 1. பிரசவ விடுதி | A – எக்தென் சமியன் |
| 2. சுகாதார வசதிகளுடன் கூடிய வைத்தியசாலை | B – வெஜ்ஜசாலா |
| 3. அரசாட்சிக்காலத்தல் காணப்பட்ட அரச சபை | C – உபசக்கரோக நாசக |
| 4. காய்ச்சல் நோயாளிகளுக்கு உருவாக்கப்பட்ட தனியான வைத்தியசாலை | D- பஸவந்தி நாம சால |

    1. DBAC 2. BACD 3. DCAB 4. ABDC

19. கெதிஅட, கெடுகனத என்பது.
    1. சேனைப் பயிர்ச் செய்கையின் பாதுகாப்புக்காக வழங்கிய இருவகையான வரி.
    2. சேனைப் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்திய இருவகை உபகரணங்கள்.
    3. சேனைப்பயிர்ச் செய்கையில் மேற்கொண்ட இரு போகங்கள்.
    4. சேனைப் பயிர்ச் செய்கையில் நடப்பட்ட இரு பயிர்வகைகளாகும்.

20. உலோகங்களினால் கைத்தொழில்களை மேற்கொண்ட கலைஞர்கள் அக்காலத்தில் இருந்துள்ளனர். அக்கால தங்க கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?
    1. கபர 2. தம்பகர 3. துலாதார 4. மணிகர

21. தென்னிந்திய கூலிப்படையினரின் உதவியைப் பெற்றுக் கொண்ட புராதன கால இலங்கை ஆட்சியாளர்கள் யாவர்?
    1. இளநாகன் - துட்டகைமுனு 2. இளநாகன் - அபயநாகன்
    3. இளநாகன் - மகாசேனன் 4. அபயநாகன் - வலகம்பாகு

22. கி.பி 850 இல் சிவனொளிபாத மலையைத் தரிசிக்கச் சென்ற தேச சஞ்சாரியும் வர்த்தகருமான நபர் யார்?
    1. சுலைமான் 2. பல்டியஸ் 3. இபுனு பதூதா 4. செங்கோ

23. புராதன காலத்தில் மூன்று போகங்கள் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. மூன்றாவது போகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதற்கு அடிப்படையாக அமைந்த காரணம் யாது?
1. கிராமத் தலைவர் விருப்பின் பேரில் ஆகும்.
2. சென்ற போகத்தில் மேற்கொள்ளப்பட்ட விளைச்சலின் அடிப்படையில் ஆகும்.
3. நீர் கிடைக்கும் தன்மையை பொருத்தாகும்.
4. விவசாயிகளின் ஆர்வத்தைப் பொருத்தாகும்.

24. வரலாற்றுக்கு முற்பட்ட கால கற் சுவரின் பகுதிகள் சில கண்டுபிடிக்கப்பட்ட இடம் பின்வருவனவற்றுள் எது?
1. பாகியங்கல குகை  2. ரஞ்சாமடம்  3. அலிகல  4. கிதுல்கல பெலிலென

- இரு எச்சக் குன்றுகளைத் தொடுக்கும் வண்ணம் குளக்கட்டு அமைத்தல்.
- குளக்கட்டின் நீளம் ஏழு மைல்கள்

25 மேற்கூறப்பட்ட காரணிகளை உள்ளடக்கிய குளம் யாது?
1. கலாவாவி  2. மின்னேரியா குளம்  3. யோதவாவி  4. பதவியாக்குளம்.

26. சீகிரியா நீர்ப்பூங்காவுக்கு பயன்படுத்தப்பட்டுள்ள கருங்கல் துவாரங்களின் விட்டத்தின் அளவுகளில் மாற்றம் செய்யப்பட்டிருப்பதற்கான காரணம்.
1. அமுக்கத்தினால் மேலெழும் தண்ணீர் உயரத்தில் வேறுபாடுகளை ஏற்படுத்த.
2. வேகமாக நீரோட்டத்தைப் பெற.
3. நீரின் அமுக்கத்தைக் குறைக்க.
4. பாயும் நீரின் அமுக்கத்தை அதிகரிக்க.

27. அதிக சுமையைத் தாங்கும் வகையில் கட்டப்பட்ட கட்டடக்கலை நிர்மாணமொன்றின் நவீன அத்திவாரமொன்றைக் கட்டியெழுப்பியமைக்கான சான்று பின்வருவனவற்றுள் எதில் கண்டு பிடிக்கப்பட்டது?
1. மல்வத்து ஓயா கற்பாலம்  2. ருவன் வெலிசாயா தூபி
3. மாதுருஓயா நீர்த்தேக்கம்  4. சீகிரியா பூங்கா

28. ஆலாஹனா பிரிவெனா வளாகத்தின் அகழ்வில் கண்டுபிடிக்கப்பட்ட மிக முக்கியமான தகவல் அடங்கிய விடைத் தொகுதி.
1. உலோகவியல் தொழினுட்பம் மற்றும் நீர்ப்பாசனத் தொழினுட்பம்.
2. அறுவை சிகிச்சை மற்றும் பூங்கா நிர்மாணக்கலை.
3. அறுவை சிகிச்சை மற்றும் அழுக்கு நீர் முகாமைத்துவம்.
4. நீர் முகாமைத்தவம் மற்றும் கட்டடக்கலை நிர்மாணத்திறன்.

29. இலங்கையில் தங்கத் தொழில் வளர்ச்சியைக் காட்டும் 21 மலர் வேளைப்பாடுகளுடன் கூடிய நெல்மணி அளவிலான தங்க நகையின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்ட பிரதேசம் யாது?
1. அபயகிரி விகாரை  2. சீகிரியா
3. ஜேதவன ராம விகாரை  4. மிஹிந்தலை

30. பொலன்னறுவை யுகத்தில் 'காவுத கணு' எதற்காகப் பயன்படுத்தப்பட்டது?
1. அரச எல்லைகளைக் குறிப்பிடுவதற்கு.
2. பெருந்தெருக்களில் அளவைக் குறிப்பதற்கு.
3. நீர்ப்பாசன கால்வாயின் தூரத்தை அளப்பதற்கு.
4. சரணாலயங்களின் எல்லைகளைக் குறிப்பிடுவதற்கு.

31. புராதன சமூகத்தில் தலைமறைவாகி இருக்கும் குற்றவாளியைப் பிடிக்கும் பொறுப்பு யாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது?
1. கமிகவிடம்  2. தசகம் எக்தென்னிடம்
3. பருமகவிடம்  4. கிராமத்திலுள்ள அனைவரிடமும்.

32. புராதன இலங்கையில் உள்நாட்டு வர்த்தகம் தொடர்பான சட்டதிட்டத்தை உள்ளடக்கிய கல்வெட்டு யாது?
1. வேவெல்கெட்டிய  2. மிஹிந்தலை
3. சொரபொரவாவி  4. கொடவாய

33. மூன்று முறை இந்நாட்டை ஆட்சி செய்த பெண் என வரலாற்றில் இடம்பெற்றுள்ள அரசி யார்?
1. லீலாவதி  2. சுகலாதேவி  3. சூல சீவலி  4. கல்யாணவதி

Past Papers Wiki

34. முற்காலத்தில் இலங்கை சமுதாயம் பெண்களை உயர்வாக கருதியமைக்கு செல்வாக்குச் செலுத்திய மிக முக்கியமான காரணி யாது?
    1. தாய்மார்களாகப் பொறுப்பேற்றல்.
    2. கணவன் மனைவிக்கு மரியாதை செலுத்துதல்.
    3. பாரம்பரிய பழக்க வழக்கங்களைப் பாதுகாத்து வரல்.
    4. சமையல் கலையில் சிறந்து விளங்குதல்.

35. பின்வரும் கூற்றுக்களை அவதானிக்க.
    - நகரத்திட்ட வரைப்படங்களில் கேத்திரகணித பொறிமுறைத் தன்மையின்றிக் காணப்படல்.
    - நகரங்கள் அளவில் பெரியவனவாகக் காணப்பட்டமை.

    மேற்கூறப்பட்ட கூற்றுக்களுடன் தொடர்புபட்ட நகரங்கள் பின்வருவனவற்றுள் எவை?
    1. அநுராதபுரம், பொலன்னறுவை
    2. தம்பதெனியா, யாப்பகுவ
    3. அநுராதபுரம், தம்பதெனியா
    4. பொலன்னறுவை, குருநாகல்

36. பின்வரும் கூற்றுக்களுள் பொலன்னறுவைக் காலத்துடன் பொருந்தாத பிழையான கூற்று யாது?
    1. பௌத்த மதம் மற்றும் கலாசாரத்தின் மீது இந்து மதச் செல்வாக்கு காணப்பட்டமை.
    2. மாகனின் படையெடுப்பால் பொலன்னறுவை இராச்சியம் வீழ்ச்சியடைந்தமை.
    3. பொலன்னறுவைக் காலத்தில் மகாதித்த துறைமுகம் மிக முக்கிய துறைமுகமாக காணப்படல்.
    4. முதன் முறையாக சோழர்கள் தமது நிர்வாக மையமாக பொலன்னறுவையைத் தேர்ந்தெடுத்தல்.

பின்வரும் A, B, C, D எனும் சோடிகளின் மூலம் தரப்பட்டுள்ளவற்றிலிருந்து கீழே கேட்கப்பட்டுள்ள 37, 38, 39 ஆம் வினாக்களுக்கு விடையளிக்குக.

A – 1. பொலன்னறுவை வீழ்ச்சியடைதல்
    2. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்பு

B – 1. தம்பதெனியா இராச்சியம்
    2. ஐந்தாவது மகிந்தன்

C- 1. முதலாவது இராசதானி
    2. அநுராதபுரம்

D – 1. சோழர்களிடமிருந்து நாட்டை மீட்டெடுத்தல்.
    2. முதலாம் விஜயபாகு மன்னன் அரசாட்சியை உறுதிப்படுத்தல்.

37. முதலாவதற்கும், இரண்டாவதற்கும் எவ்வித தொடர்புமற்ற சோடிப்பதம் யாது?
    1. A    2. B    3. C    4. D

38. முதலாவது ஏற்படுவதற்கு இரண்டாவது காரணமாக அமைந்த சோடி.
    1. A    2. B    3. C    4. D

39. முதலாவதன் விளைவாக இரண்டாவது தோற்றம் பெற்றது என்பதனைக் குறிப்பிடும் சோடிப்பதம் யாது?
    1. A    2. B    3. C    4. D

40. யாழ்ப்பாண இராச்சியத்தின் முதல் மன்னன் யார்?
    1. வரோதயன்    2. பரராசசேகரன்    3. விஜயகூலங்கை    4. சங்கிலி

(40x2=80 புள்ளிகள்)

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

| | | |
|---|---|---|
| ඉතිහාසය II<br>வரலாறு II<br>History II | 33 T II | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>Three hours |
| දෙවන වාර විභාගය 2024<br>இரண்டாம் தவணைப் பரீட்சை 2024<br>**Second Term Examination 2024** | අමතර කියවීම් කාලය මිනිත්තු 10 යි<br>மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்<br>Additional Reading time 10 minutes | 10 වන ශ්‍රේණිය<br>தரம் 10<br>Grade 10 |

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களை தெரிவு செய்வதற்கும் முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தை பயன்படுத்துக.

அறிவுறுத்தல்கள் :

- பகுதி I முதலாம் வினா கட்டாயமானது.
- பகுதி II இலிருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி III இலிருந்து **ஒரு** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக 6 வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி – I

01. (அ) 1. பின்வரும் அனைத்தையும் இலங்கைப் படத்தில் குறித்துப் பெயரிடுக.
கலாஓயா. கிரிந்தி ஓயா, ஜம்புகோளப் பட்டிணம், லங்கா படுன, மின்னேரியாக் குளம், நாச்சதுவ வாவி, யாழ்ப்பாணம், தேவ நகர், திருக்கேதீஸ்வரம், ஹோட்டன் சமவெளி, செங்கடகல, குருநாகல்

(12 புள்ளி)

2. பின்வருவனவற்றை உலகப்படத்தில் குறித்துப் பெயரிடுக.
உரோம், செங்கடல், போர்த்துக்கல், கள்ளிக்கோட்டை, தாய்லாந்து, பத்தேவியா

(6 புள்ளி)

(ஆ) 1. பின்வரும் A.B.C.D ஆகியவற்றுக்கு விடையளிக்க.

A – நாகதீபத்தை நிர்வகித்த இசிகிரி என்பவர் கட்டிய விகாரை.

B – அரசனுக்குச் சொந்தமான நிலங்களில் பயிர் செய்வதற்குச் செலுத்தப்பட்ட வரி.

C- யோகாத்தவய எனும் நூலை எழுதிய யுகம்.

D- அம்பக்க தேவாலயமாக்கிய மன்னன்.

(4 புள்ளி)

பின்வரும் உருக்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்க.

2. 1. A எனும் உருவிலுள்ள நிர்மாணிப்பு யாது?
2. இது எங்கு அமைந்துள்ளது?
3. இது எதனைக் குறிப்பிடுகிறது?
4. இது எக்கலை மரபைக் கொண்டது?

(4 புள்ளி)

A



B



3. 1. B எனும் உருவிலுள்ளது யாது?
2. இது அமைந்துள்ள நகரம் யாது?
3. இதனைக் கட்டிய மன்னன் யார்?
4. இதில் எதனை வைத்துக் கட்டப்பட்டுள்ளது?

(4 புள்ளி)

PAST PAPERS WIKI



සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki

## பகுதி –ii

02. 1. இலங்கை வரலாற்றை அறிந்து கொள்ளக் கூடிய தொல்பொருள் மூலாதாரங்கள் 3 குறிப்பிடுக? (3 புள்ளி)
2. வரலாற்றை அறிந்து கொள்வதற்காக இலக்கிய மூலாதாரங்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் இரண்டு தருக? (4 புள்ளி)
3. வரலாற்றை அறிந்து கொள்ள பயன்படுத்தும் நாணய மூலாதாரத்தின் முக்கியத்துவங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)
4. வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவங்கள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளி)

03. 1. வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த.
A - ஈரவலய குகைகள் 2 உம்
B - ஈரவலய வெட்டவெளி ஒன்றினையும் குறிப்பிடுக. (3 புள்ளி)
2. குளோசியன் யுகத்திற்குற்பட்ட இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட யுகம் பற்றிய மிகவும் பழைமையான ஆதாரங்கள் கிடைக்கப்பெற்ற 2 இடங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)
3. முன்வரலாற்றுக்காலத்தில் மிகச்சிறந்த தொழிநுட்பம் காணப்பட்டமைக்கான இரண்டு ஆதாரங்களைக் குறிப்பிட்டு விளக்குக? (5 புள்ளி)
4. ஆரம்ப வரலாற்றுக் காலத்தில் குடியிருப்புக்களின் கட்டமைப்பும் தன்மையும் பற்றி மூன்று காரணிகளைக் கொண்டு விளக்குக. (6 புள்ளி)

04. 1. புராதன கால அரசர்கள் பயன்படுத்திய அரச கோட்பாடுகள் சில பின்வருமாறு. இவற்றுக்குரிய அரசர்களை ஒழுங்கு முறையில் தருக.
A – நரேஸ்வரா
B – மின்னேரிய தெய்வம்
C – மலையின் அரசன் (3 புள்ளி)
2. புராதன கால ஆட்சியாளர்கள் தமது நாட்டு மக்களுக்கு ஆற்றவேண்டிய சேவைகள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)
3. புராதன இலங்கையில் அரசுரிமை கிட்டிய விதம் பற்றி இரண்டு உதாரணங்கள் மூலம் விளக்குக. (5 புள்ளி)
4. முதலாம் விஜயபாகு மன்னன் முழு நாட்டினதும் பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இரண்டினைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

05. 1. சேனையை அறிமுகப்படுத்த பின்வரும் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ள மூலாதாரங்களை ஒழுங்கு முறையில் தருக.
A – செஹென்
B – சேன
C – பிட்டபிம் (3 புள்ளி)
2. புராதன சந்தைகள் முறையாக நிர்வகிக்கப்பட்டன என்பது பற்றி சொரபொரவாவித் தூண் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக. (4 புள்ளி)
3. பண்டைய காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தில் கைத்தொழில் மிக உன்னத நிலையில் காணப்பட்டமைக்குரிய ஆதாரங்கள் இரண்டினை விளக்குக. (5 புள்ளி)
4. எமது நாட்டை ஆட்சி செய்த மன்னர்கள் அயல் நாட்டுடன் மற்றும் தூர நாடுகளுடன் கொண்டிருந்த தொடர்புகள் பற்றி மூன்று காரணிகளைக் கொண்டு விளக்குக. (6 புள்ளி)

06. 1. பின்வரும் ABC என்பவற்றை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

A. குளத்திலிருந்து தண்ணீரை கால்வாய்களுக்குத் திறந்து விடுவதற்காக குளத்தினுள் கட்டப்பட்டிருக்கும் செவ்வக வடிவிலான கருங்கல் தொட்டி

B. உலர் வலயத்தில் நீரின் தரம், குளிர்ச்சி என்பவற்றைப் பேணிக் கொள்வதற்காக பொது மக்கள் பயன்படுத்திய முறைக்கு வழங்கப்பட்ட பெயர்

C. போதிமரத்தை மறைத்துக் கட்டப்பட்ட மனை (3 புள்ளி)

2. A – அம்பன் கங்கையை மறித்துக் கட்டப்பட்ட கால்வாய்

B – இக்கால்வாய் மூலம் நீரைப்பெற்றுக்கொண்ட மூன்று குளங்கள் (4 புள்ளி)

3. புராதன கால கட்டடக்கலையில் சிறந்து விளங்கும் பௌத்த கட்டடங்கள் பற்றி இரண்டு உதாரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளி)

4. புராதன கால மன்னர்கள் மக்களின் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி மூன்று காரணிகளைக் கொண்டு விளக்குக. (6 புள்ளி)

07. 1. எமது மூதாதையர் நிலத்தை அளவிடப் பயன்படுத்திய முறைகள் மூன்று தருக. (3 புள்ளி)

2. புராதன இலங்கையர் இரும்பை பிரித்தெடுப்பதற்குப் பயன்படுத்திய இரண்டு முறைகளையும் குறிப்பிடுக. (4 புள்ளி)

3. சீகிரியா நீர்ப்பூங்காவின் வடிவமைப்புப் பற்றி சுருக்கமாக விளக்குக. (5 புள்ளி)

4. அக்கால மக்கள் விவசாயத் தேவைகளின் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு சம்பிரதாயங்கள் மூன்றினை சுருக்கமாக விளக்குக. (6 புள்ளி)

## பகுதி – III

08. 1. பண்டைய சமுதாயத்தில் உற்பத்திகளை அனுபவித்து வந்த உயர் குலத்தவர்களாகச் செயற்பட்ட மூன்று குழுக்களைப் பெயரிடுக. (3புள்ளி)

2. பின்வரும் தகவல்கள் அடங்கிய மூலாதாரங்கள் எவை என்பதைக் அடைப்பில் இருந்து தெரிவு செய்க.

A – நீதிமன்றம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது

B – பருமகலூ சுமணா பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

C – திலசங்குலிக்கா எனும் உணவு பந்நிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

D – பிறருக்குச் சொந்தமான மாடுகளைக் களவு செய்து பிடிபட்டால் அதற்கு தண்டனை வழங்குதல் பற்றி குறிப்பிடுவது. (4 புள்ளி)

(வேவெல்கெடிய, பிராமணிய, சத்தர்மலங்காரய, சித்துல்பவ்வ, தோணிகல , தம்பியா அடுவா கெடபதய, மிஹிந்தலை)

3. புராதன ஆட்சியாளர்கள் சுற்றாடலைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தினை உணர்ந்து மேற்கொண்ட நடவடிக்கைகள் பற்றி இரண்டு உதாரணங்களைக் கொண்டு விளக்குக. (5 புள்ளி)

4. முற்காலத்தில் பெண்கள் சமுதாயத்தில் மரியாதைக்குரியவர்கள் எனும் கூற்றுக்கு அமைய மூன்று உதாரணங்களைக் கொண்டு விளக்குக. (6 புள்ளி)

09. 1. கலிங்க மாகனின் ஆக்கிரமிப்புக்குப் பின் சில தேசியத் தலைவர்கள் அமைத்துக் கொண்ட பாதுகாப்பு அரண்கள் மூன்றினைக் குறிப்பிடுக. (3 புள்ளி)

2. புராதன நகரங்களின் வீழ்ச்சிக்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. (4 புள்ளி)

3. உலர்வலய நாகரிகம் வீழ்ச்சியடைந்ததன் பின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக. (5 புள்ளி)

4. ஆறாம் பராக்கிரமபாகு மன்னனின் அரசியல் மற்றும் இலக்கிய சேவைகளை மூன்று உதாரணங்களைக் கொண்டு விளக்குக. (6 புள்ளி)



සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

# 10 ශ්‍රේණිය කෙටි සටහන් පොත් සංශෝධිත නව විෂය නිර්දේශයේ පාඩමෙන් පාඩමට



Rs : 300



Rs : 300



Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 150



Rs : 200



Rs : 300



Rs : 350



Rs : 300



Rs : 300



Rs : 150



Rs : 200



Rs : 150



Rs : 300



Rs : 300



Rs : 300

මෙම කෙටි සටහන් පොත් සකස් කොට ඇත්තේ ජාතික අධ්‍යාපන ආයතනය මගින් සම්පාදනය කොට ඇති නව විෂය නිර්දේශය අනුව, විෂය ප්‍රවීණත්වයෙන් යුත් සම්පාදක මණ්ඩලයක් විසිනි, එහෙයින් මෙහි අන්තර්ගත සියලු සටහන් එම විෂය නිර්දේශයේ සෑම මාතෘකාවක්ම ආවරණයකොට තිබේ. මෙම ග්‍රන්ථ සම්පාදනය කිරීමේ දී පූර්ණ අවධානය යොමුකොට ඇත්තේ සිසුන්ට මෙන්ම ගුරුවරුන්ට ද අවශ්‍යයෙන්ම මතකයේ තබා ගත යුතු සියලු කරුණු අන්තර්ගත කරමින් වන හෙයින් වෙනත් අතිරේක ග්‍රන්ථ පරිහරණයකින් තොරව වුවද අදාල විෂය නිර්දේශයේ වැදගත් කරුණු සියල්ල ඉතා පහසුවෙන් හැදෑරීමේ මෙන්ම මතකයේ රඳවා ගැනීමේ හැකියාව ද ලැබෙනු ඇත.



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180



Rs : 180

LOL.LK
LOL STORE (PVT) LTD
CASH ON DELIVERY
VISA
mastercard
KOKO
037 20 60 110
071 77 74 440
Buy Now
CLICK HERE